₹100/-

ஞானகுரு

# தமிழ் லீடர்

எஸ்.கே.முருகன்

மே 2024

ாலியா... கேலியா ஓர் அரசியல் இதழ்



எத்தனை மதிப்பெண்..?



தொடர் ஆரம்பம்



ஜாதக ரகசியம்



அமைச்சர் பதவி



## நான் இந்தியப் பிரதமராகும் வாய்ப்பு இருக்கிறது...

# விருப்ப சந்தா
## 500 ரூபாய் செலுத்துங்கள்




மன நிம்மதிக்கு வழி சொல்லும் மகிழ்ச்சி, உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் தரும் யாக்கை, நாட்டு அரசியல் நிலவரத்தை நச்சென்று விமர்சனம் செய்யும் தமிழ் லீடர் ஆகிய இதழ்கள் ஞானகுரு பதிப்பகத்திலிருந்து இலவச மின்னிதழாக ஒவ்வொரு மாதமும் வெளிவருகின்றன. இதனை ஆதரிக்கும் வகையில் ஆண்டுக்கு 500 ரூபாய் மட்டும் விருப்ப சந்தாவாக செலுத்துங்கள். பழைய இதழ்களைப் படிக்க எங்கள் இணையதளத்திற்கு வருகை தாருங்கள்.

- ஞானகுரு (gyaanaguru.com)

பணம் அனுப்பவேண்டிய எண் : +91 72997 53999







# ஸ்டாலின் மூன்றாண்டு ஆட்சிக்கு எத்தனை மதிப்பெண்..?

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்தியாவுக்கே திராவிட மாடல் வழிகாட்டியாக இருக்கிறது என்று அவரது கட்சியினர் குதூகலமடைகிறார்கள்.

இதுகுறித்து ஸ்டாலின், ‘இது சொல்லாட்சி அல்ல; செயலாட்சி! மக்களின் நன்றி கலந்த வாழ்த்தும், புன்னகை அரும்பும் முகங்களும் தான் இன்னும் இன்னும் உழைக்கத் தூண்டுகிறது! நம்பிக்கையோடு முன்செல்கிறேன்... பெருமையோடு சொல்கிறேன்... தலைசிறந்த மூன்றாண்டு! தலைநிமிர்ந்த தமிழ்நாடு’ என்று பெருமிதம் அடைந்திருக்கிறார். இதுவரையிலான மூன்று ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க சில சாதனைத் திட்டங்களை அரசு நிறைவேற்றி யுள்ளது. குறிப்பாக மகளிர் இலவச பேருந்து பயணம், மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்றவை நல்ல முறையில் பயன் தருகின்றன. அதேநேரம், மத்திய அரசிடம் இருந்து வரவேண்டிய நியாயமான தொகை களையும் திட்டங்களையும் பெற முடியாத நிலை நிலவுகிறது. வெள்ள நிவாரணத்துக்கு ஒரு ரூபாய் கூட கிடைக்கவில்லை. மதவாதக் கட்சி என்று பா.ஜ.க.வுடன் கடுமையாக மோதுவதால் தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டிய பயன் வந்து சேரவில்லை. இதற்கான தண்டனையை மக்கள் அந்தக் கட்சிக்குக் கொடுக்கிறார்கள் என்றாலும், திட்டங்களையும் தொகையையும் கேட்டுப் பெறுவதில் இன்னமும் வேகமும் விவேகமும் காட்ட வேண்டியது முக்கியம்.

அதேபோல், கடந்த ஆட்சியில் நடந்தது போலவே இந்த ஆட்சியிலும் கனிம வளக் கொள்ளை எந்த தடையும் இல்லாமல் நடக்கிறது. சகல கட்சியினரும் கூட்டு சேர்ந்துகொண்டு இயற்கை வளத்தை சுரண்டுகிறார்கள். முன் எப்போதும் இல்லாத அளவுக்கு கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. திராவிட மாடல் அரசு என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் தமிழகத்தில் இன்றும் பட்டியலின மக்களால் நுழைய முடியாத கோயில்கள் நிறையவே இருக்கின்றன. ஜாதி மோதல்களை தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வேடிக்கை பார்க்கும் போக்கு நிலவுகிறது. இவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கும் போது கடந்த மூன்று ஆண்டு கால ஆட்சிக்கு 50 மதிப்பெண் மட்டுமே கொடுக்க முடியும். இதுவே பாஸ் என்று பெருமைப்படுவதற்கு எதுவும் இல்லை, இன்னமும் போகவேண்டிய தூரம் நிறையவே இருக்கிறது.

ஆசிரியர்

# மூன்றாவது முறை பிரதமர் ஆவாரா மோடி?


## ஜாதகம் சொல்லும் ரகசியம்


கலியுகத்தில் என்ன வேண்டுமானாலும் நடக்கும், எப்படி வேண்டுமானாலும் பேசுவார்கள். உண்மைக்கும் பொய்க்கும் வித்தியாசத்தை யாரும் கண்டுபிடிக்கவே முடியாது.

ஆச்சர்யங்களும் அதிசயங்களும் எக்கச்சக்கமாக நடக்கும் என்பதற்கு உதாரணம் பிரதமர் மோடி. ரயில்வே ஸ்டேஷனில் டீ விற்பனை செய்த ஒருவர், இந்தியாவுக்கே பிரதமர் எனும் உயரிய பதவிக்கு வந்து ரயிலையே விற்பனை செய்திருக்கிறார்.

ஜனசக்தி இயக்கத் தலைவர்கள் விதைத்த விதையை, இன்று மோடி அறுவடை செய்து வருகிறார். ஜனசக்தி இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டவர், ஒரு கட்டத்தில் பா.ஜ.க.வின் துடிப்புமிக்க செயல்வீரனாகவும் செயல் புயலாகவும் மாறி அனை வரது மனதையும் கவர்ந்தார். திறமை, அறிவு, மதி நுட்பத்துடன் பக்தி என்னும் யுக்தியைக் கலந்து, இந்து மத உணர்வை தட்டி எழுப்பியதன் மூலம் தலைமை பீடத்திற்கு வந்தார்.

இந்த இடம் அதிர்ஷ்டத்தில் அல்லது யாரோ கொடுத்து அவருக்குக் கிடைத்து விடவில்லை. இதற்காக நாற்பது ஆண்டு காலம் கடுமையாக உழைத்திருக்கிறார். குடும்பம், உறவு என்பதையெல்லாம் தள்ளிவைத்து, முழு நேர அரசியலில் இறங்கி எதிரிகளுடன் மூர்க்கமாக மோதியிருக்கிறார். கட்சியில் தன்னை தாண்டி வேறு ஒரு தலைவர் இல்லை என்ற சிந்தனையை புகுத்திவிட்டார். குஜராத் மாநிலத்துக்கு முதல்வர் ஆனதும், அரசியல் ஆலோசகர்களை நியமித்து குஜராத் இந்தியாவின் நம்பர் ஒன் மாநிலம் என்று விளம்பரம் செய்வதற்கு ஏற்பாடு செய்தார். இது, மிக சிறப்பாக மோடிக்குக் கை கொடுத்தது. அன்றைய தினம்






மீடியாக்கள், பத்திரிகைகள் என்ன சொன்னாலும் அவற்றை உண்மை என்று மக்கள் நம்பினார்கள். ஆகவே, மோடியே பிரதமர் பதவிக்குத் தகுதியானவர் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் பா.ஜ.க. மிகச்சிறப்பாகப் புகுத்தியது.

நூறு ஆண்டுகால வரலாறு படைத்த காங்கிரஸ் கட்சியின் 10 ஆண்டு கால ஆட்சியின் அதிருப்தி, விலைவாசி உயர்வு, பெட்ரோல், கேஸ் விலை உயர்வு, ஊழல் போன்றவற்றை சமூகவலைதளம், மீடியா மூலம் மீண்டும் மீண்டும் பரப்பி, அரசியல் சூழலை தனது பக்கம் திருப்பிக்கொண்டார். இளைஞர்கள், படித்தவர்கள் மத்தியில் மோடி மீது ஒரு தனி கவர்ச்சியே உருவானது. மாற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த மக்கள் பா.ஜ.க. என்ற கட்சியைக் கவனிக்காமல் நரேந்திரமோடி என்ற தனிப்பட்ட மனிதர் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தார்கள். இந்தியாவின் பிரதமராக மாறினார். மாற்றத்துக்கான தன்னுடைய பணி இன்னமும் முடிவடையவில்லை என்று 2019 தேர்தலில் உருக்கமாகப் பேசினார். மக்களும் அதை நம்பி மீண்டும் அவருக்கு வாக்களித்தார்கள்.

இப்போது 2024 தேர்தலில் மீண்டும் வாக்கு கேட்கிறார். 2047ல் இந்தியாவை வல்லரசாக மாற்றிக் காட்டுவேன் என்று மார் தட்டுகிறார். அவர் மூன்றாவது முறை பிரதமர் பதவிக்கு வருவதற்கு அவரது ஜாதகக் கட்டம் சரியாக இருக்கிறதா என்பதைப் பார்க்கலாம்.


**மோடி ஜாதகம்**

மோடியின் ஜாதகத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, கிரக நிலைகளுக்கு தகுந்தாற் போல் அவரது வாழ்க்கை அமைந்து உள்ளதை அறியலாம். இவர் சிம்ம லக்னம் விருச்சிக ராசி அனுஷம் நட்சத்திரம் என்பதால் அரசாள ஆளுமை மிக்க உரிய கிரகமான சூரியன், செவ்வாய், குரு நல்ல பலம் பெற்று இருப்பதும் லக்னத்தில் சனியும் இருப்பதால் பொறுப்புமிக்க பதவி ஏற்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறது.

சிம்ம லக்னம் என்பதால் எதற்கு துணிந்து செயல்படக்கூடிய நபராகவும் பின்விளைவு பற்றி கவலை இல்லாத காரியவாதியாக இருக்கிறார். விருச்சிக ராசி குணம் சுயலாபத்திற்காக எப்படி வேண்டுமானாலும் நடிப்பது என்பதற்கு மோடியே உதாரணம். இவருக்கு தொடக்க காலத்தில் சனி திசையே 15 வருட காலம் நடந்து உள்ளது. லக்னத்திற்கு பாதக திசை என்பதால் டீ விற்பது, பேப்பர் போடுவது, என வறுமையில் போராடியிருக்கிறார்.

இரண்டாம் பாவத்தில் புதன் ஆட்சி உச்சம் பெற்று இருப்பதால் நல்ல வசீகர பேச்சால் பலரை கவர்ந்து இழுக்கும் சக்தி பெற்றவர். மேலும் 2 ல் கேதுவும் 7 ல் குருவும் இருப்பது குடும்பம் என்பது திருப்தி இல்லை என்றே காட்டுகிறது.

குரு லக்னத்தை பார்ப்பதும் தன்னை முன்னிலைப் படுத்தவும் லக்னத்தில் சனி இருப்பதும் சனியே 6க்குடையவன் என்பதால் எதிரிகள் இன்றி காட்டு ராஜா போல் தன் இஷ்டத்திற்கு வெளிநாடு, காடு, மேடு, மலை, கடல் என சுற்றிக்கொண்டு இருக்க காரணமாக அமைந்தது. மக்கள் இவர் மீது வைத்திருந்த அதீத நம்பிக்கையாலே பதவிக்கு வந்தார். அந்த நம்பிக்கை இன்றும் மோடி மீது மக்களுக்கு இருக்கிறதா என்பதே கேள்வி. எனவே, மீண்டும் மூன்றாவது



முறையாக பிரதமர் பதவியில் அமர்வாரா அல்லது பதவி பறிபோகுமா என்பதை கால நேரம் காட்டும் திசை புக்தி கொண்டு பார்ப்போம்

தொடக்க காலத்தில் சனி திசை என்பதால் இவரது வாழ்க்கை போராட்டம் நிறைந்தாக அமைந்து விட்டது, அதன் பின் வந்த புதன் திசையில் இவரது வாழ்வில் ஏற்றமான போக்கு காணப்பட்டது

இதன் பின் கேது திசையும் சுக்ர திசையும் கட்சி பொறுப்புகளில் படிப்படியாக முன்னேறி வந்தார் என்பதும் சுக்ர திசை முடிவில் குஜராத் முதல்வர் பதவிக்கு வந்தார். இதன் பின் சூரிய திசையில் நல்லாட்சி தந்து குஜராத்தை இந்தியாவில் தொழில் வளத்தில் முதன்மை மாநிலமாக மாற்றியதாக விளம்பரம் செய்து, பெரும் புகழையும் நம்பிக்கையையும் மக்களுக்கு உருவாக்கினார். தற்போது சந்திர திசை தொடங்கி நடை பெற்று வருவதால் இவர்க்கு 2011ல் சந்திர திசை தொடங்கியது. எனவே 2014-ல் நடந்த தேர்தலில் வெற்றியும் பிரதமர் பதவியும் தேடி வந்தது. அதன் பின் 2019 தேர்தலில் சொல்லி வைத்தது போல் பெரு வெற்றி பெற்றார்.

இவர் மீது 10 ஆண்டுகளுக்கு முன்பு வைத்திருந்த மக்கள் நம்பிக்கை இன்று இல்லை. பத்து ஆண்டு கால ஆட்சியில் பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. தனிப்பட்ட முறையில் ஊழல் குற்றச்சாட்டு இல்லை என்றாலும் சகல மக்களையும் பாதிக்கும் பெட்ரோல், கேஸ் விலை குறைப்புக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கோபம் அனைவருக்கும் உள்ளது. அதோடு, வேலை வாய்ப்பின்மை, விலைவாசி உயர்வு, ஜி.எஸ்.டி. வரி உயர்வு குளறுபடிகள் என பல்வேறு தரப்பு மக்களும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். எனவே அவரது கிரக திசை புக்தி செல்வாக்கு குறைந்திருப்பதை சுட்டிக் காட்டுகிறது.



# மூன்றாவது முறை பிரதமர் ஆவாரா மோடி?

சந்திர திசை தொடக்கத்தில் யோகம் செய்தாலும் தற்போது சந்திர திசை சுக்ர புக்தி 23 - 11-2025 நடப்பில் இருப்பதால் சுக்ர புக்தி சாதகம் இல்லாத புக்தி என்பதால் மீண்டும் பிரதமர் பதவி கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை என கிரக நிலை காட்டுகிறது அடுத்து வரக்கூடிய செவ்வாய் திசையும் சாதகம் இன்றி இருப்பதால் இனி இவர் வாழ்நாளில் ஒருபோதும் பிரதமர் பதவிக்கு வரப்போதில்லை.

பிரதமர் பதவிக்கு நரேந்திர மோடி வரப்போவதில்லை என்று அவரது ஜாதகம் சொல்வதால், இந்தியாவின் ஜாதகம் எப்படியிருக்கிறது என்று பார்த்தோம். ஆங்கிலேயர்கள் ஆட்சிக்கு முன்பு இந்தியா ஒன்றுபட்ட நாடாக இல்லை யென்றாலும் இங்கே செல்வங்கள் கொட்டிக் கிடந்தன. இவற்றை கொள்ளை அடிப்பதற்கே பல நாட்டு மன்னர்கள் படை யெடுத்து வந்தனர். அதேநேரம், வியாபாரம் செய்யவந்த ஆங்கிலேயர் ஒட்டுமொத்த நாட்டையும் ஒன்றுபடுத்தி உழைப்பையும் செல்வத்தையும் சுரண்டிக் கொழுத்தார்கள். இங்கு நிலவிய பெண்ணடிமை, ஜாதி, சமய ஏற்றத் தாழ்வுகள் போக்கவும் கல்வியும் புதிய தொழில்கள் உருவாகவும் அவர்கள் காரணமாக இருந்தனர் என்றாலும் இத்தனை ஆண்டுகளாகியும் இந்தியர்கள் ஏழையாக இருப்பதற்கே ஆங்கிலேயர்களே முழு காரணம்.

காங்கிரஸ் இயக்கம் உருவானபிறகே இந்தியா முழுவதும் சுதந்திர உணர்வு ஒன்றுபட்டு எழுந்தது. அமைதிப் புரட்சியாக காந்தியின் தலைமையில் போராட்டம் நடத்தியதன் அடிப்படையில் வெள்ளையர்கள் சுதந்திரம் தரவேண்டிய சூழலுக்கு ஆளானார்கள். நாடு சுதந்திரம் பெற்றதும் தேனாறும் பாலாறும் ஓடும் என்று மக்கள் கனவு கண்டார்கள். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. வெள்ளையர்கள் அடித்த கொள்ளையை ஜனநாயகம் என்ற பெயரில் நம்மூர் அரசியல்வாதிகள் தின்று கொழுத்தார்கள். அதனால் ஓட்டு போடுவதற்கு காசு வாங்கும் அளவுக்கு மக்களும் கேவலமான மனநிலைக்கு வந்துவிட்டார்கள்.

எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இது தான் தங்கள் நிலை என்று மக்கள் உணர்ந்துவிட்டனர். அதனால், காசு கொடுத்தால் ஓட்டு என்ற அளவுக்கு மக்கள் மனநிலை மாறிவிட்டது. எனவே, இப்போது இந்திய நாட்டின் ஜாதக நிலை எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்கலாம்.

**இந்திய ஜாதகம்**

இந்தியா சுதந்திரம் பெற்ற ஜாதகத்தை புதிய கோணத்தில் காண வேண்டும் அதன்படி இந்தியா சுதந்திரம் 15-8-1947-ல் இரவு 12.00 மணிக்கு டெல்லியில் சுதந்திரம் கொடுக்கப்பட்டதற்கு உரிய கையெழுத்து ஒப்பந்தம் ஆகி அறிவிப்பு வெளியாகின அதன்படியே ஜாதகம் போடப்பட்டது.

சுதந்திரம் கிடைக்கும் போது ரிஷப லக்னம் கடக ராசியில் பூசம் நட்சத்திரம் நடைபெற்றது இதனால் சனி திசை முழுமையாக நடைபெற்றது. 1960 வரை சனி திசை காலம் நாடு வளர்ச்சி பாதையில் வேக நடை போட்டது அதன் பின் புதன். கேது சுக்ரன் சூரியன் சந்திரன் வரை வளர்ச்சியில் உள்ளது.

தற்போது சந்திர திசை சுக்ர புக்தி 10-9-2025 வரை நடைபெற உள்ளது. இக்கால கட்டத்தில் பெண்களுக்கு ஆபத்தான காலகட்டம் எனில் சந்திரன் சுக்ரன் கடக ராசியில் நிற்க அதற்கு கோச்சார ராசியில் சனி நிற்க பெண்களுக்கு நிறையவே சிக்கல் உருவாகும். பொதுவாக மக்கள் ராசியான கடக ராசிக்கு தற்போது சனி கும்ப ராசியில் அஷ்டமத்தில் இருப்பதால் எதிர்பாராத விபத்துகளும் மரணமும் அதிகரிக்கும். ஜாதி, மத மோதல் தவிர்க்க முடியாமல் அதிகரிக்கும். சனி கும்ப ராசியை விட்டு செல்லும் வரை அதாவது 2026 வரை பொதுமக்கள் பீதியில் தான் இருப்பார்கள். சந்திரன் திசை சுக்ர புக்தி நடைபெறும் காலத்தில் புயல் மழை வெள்ளம் பெருகி வரும். 2024ம் ஆண்டு முழுவதும் நிலையான ஆட்சி இல்லாமல் குழப்பமே நிகழும். 2025-ம் ஆண்டு செவ்வாய் திசையில் திறமையான மனிதர்கள் கையில் ஆட்சி போகும். விவசாயத் தொழில் நல்ல வளர்ச்சி அடையும்.

**கணித்தவர் : ஆர். சூரியநாராயணமூர்த்தி**

**தொடர்புக்கு : 9443923665 & 98650 65849**

# ஸ்கேன் ரிப்போர்ட்



| | | |
|---|---|---|
| பெயர் | - | உதயநிதி ஸ்டாலின் |
| தொழில் | - | நடிப்பு முன்பு சினிமாவில் இப்போது அரசியலில். |
| வருமானம் | - | 30 ஆயிரம் கோடின்னு ஆடியோவுல பேசிக்கிட்டாங்க |
| சூப்பர் ஹிட் | - | எய்ம்ஸ் செங்கல் |
| ஒரே நண்பன் | - | ஜாபர் சாதிக் இல்லை |
| ஒரே எதிரி | - | கனிமொழி இல்லை |
| பிடித்த நடிகர் | - | விஜய் இல்லை |
| பிடித்த நடிகை | - | துபாயில் இல்லை |
| பிடித்த வார்த்தை | - | சின்னவர் |
| பிடிக்காத வார்த்தை | - | வாரிசு |
| அரசியல் வழிகாட்டி | - | அம்மா |
| இப்போதைய ஆசை | - | துணை முதல்வர் |
| அடுத்த டார்கெட் | - | இளைஞர் அணியில் இன்பநிதி |


ஸ்கேன்
ரிப்போர்ட்


## இந்த மாத சிறப்பு விமர்சகர்

# ஓவியர் அரஸ்

பெரும்பாலான கலைஞர்கள் அரசியல் பக்கம் எட்டியே பார்ப்பதில்லை. ஏதேனும் ஒரு கட்சிக்கு ஆதரவு கொடுத்தால் இன்னொரு கட்சியிடம் இருந்து நெருக்கடி வரும், எதிர்காலத்தில் பிரச்னை வரும் என்பதால் அடக்கியே வாசிப்பார்கள். ஆனாலும், ஒருசில எழுத்தாளர் கள், ஓவியர்கள், கலைஞர்கள் மட்டுமே தங்கள் குரலை உரத்துச் சொல்கிறார்கள். அந்த வகையில், 2024 மக்களவைத் தேர்தலை யொட்டி ஓவியர் அரஸ் பதிவு செய்திருக்கும் அட்டகாசமான சில கார்ட்டூன்கள் இங்கே.
















# என்ன செய்தார் சைதை துரைசாமி



## அத்தியாயம் 1
## மேயர் தேர்தலில் வரலாற்று வெற்றி

**செப்டம்பர் 16, 2011.**

சென்னை பெருநகர மேயர் வேட்பாளராக சைதை துரைசாமியை, அன்றைய முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இது, அன்றைய அ.தி.மு.க. முக்கிய நிர்வாகிகளுக்கு பெருத்த ஏமாற்றமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. அது ஏன் என்ற அரசியல் பின்னணி குறித்து பின்னர் விரிவாகப் பார்க்கலாம்.

அதே நேரம், சைதை துரைசாமியை வேட்பாளராக அறிவித்ததில் பொதுமக்களிடம் வரவேற்பு இருந்தது. எம்.ஜி.ஆர். காலத்தில் இருந்து அதிமுகவின் தீவிர தொண்டர். கட்சியின் பெயரைச் சொல்லி பணம் சம்பாதிக்காதவர், ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆட்படாதவர், பதவியில் இருந்தாலும் இல்லையென்றாலும் மக்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகள் செய்பவர், மனிதநேயம் அறக்கட்டளை மூலம் ஐ.ஏ.எஸ்., மற்றும் டி.என்.பி.எஸ்.சி தேர்வுகளுக்கு இலவச பயிற்சி கொடுத்துவருபவர், மாணவர்களுக்கு இலவச பிரதியகம் நடத்தி வருபவர் என்று சைதை துரைசாமி பற்றி மக்களிடம் நல்ல அபிப்ராயம் இருந்தது.

இவை எல்லாவற்றையும்விட, 2011 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல், கொளத்தூர் தொகுதியில் இன்றைய தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் மிகவும் சொற்பமான வாக்குகள் வித்தியாசத்தில் சைதை துரைசாமி தோல்வி அடைந்திருந்தார். தேர்தல் முறைகேட்டினால் அடைந்த தோல்வியை எதிர்த்து சைதை துரைசாமி தொடர்ந்த வழக்கு இன்னமும் உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது குறிப்பிட வேண்டிய விஷயம்.

இந்த நிலையில், சைதை துரைசாமியை எதிர்த்து சென்னை மேயராக இருந்த மா. சுப்பிரமணியன் தி.மு.க. சார்பில் நிறுத்தப்பட்டார். எனவே சைதை துரைசாமிக்கு வெற்றி கிடைக்காது என்று அ.தி.மு.க.வினரே மந்தமாக செயல்பட்டனர்.

### சாதனை வெற்றி

ஆனால், ஸ்டாலினிடம் கிடைத்த தோல்வியை ஈடுசெய்யும் வகையில் வரலாற்று சாதனையாக ஒரு மாபெரும் வெற்றி மாநகராட்சித் தேர்தலில் சைதை துரைசாமிக்குக் கிடைத்தது. பெருநகர சென்னை மேயர் தேர்தலில் சைதை துரைசாமி 12 லட்சத்து 40 ஆயிரம் வாக்குகள் பெற்றார். எதிர்த்து நின்ற முன்னாள் மேயர் மா. சுப்பிரமணியன் 7 லட்சத்து 20 ஆயிரம் வாக்குகளே பெற முடிந்தது. அதாவது, 5,19,747 வாக்குகள் அதிகம் பெற்று மாபெரும் சாதனை வெற்றி படைத்தார். இந்திய அளவில் எந்த மேயரும் இதுவரை வாங்காத வாக்குகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த தேர்தலில் 31 அ.தி.மு.க. கவுன்சிலர்களே தோல்வி அடைந்தனர். அந்த 31 வார்டுகளிலும் கூட சைதை துரைசாமிக்கு கூடுதல் வாக்குகள் கிடைத்திருந்தன. ஒட்டுமொத்தமாக சென்னை மாநகராட்சியில் அ.தி.மு.க. கவுன்சிலர்கள் அனைவரும் சேர்ந்து 1.70 லட்சம் வாக்குகள் மட்டுமே அதிகம் பெற்றிருந்தார்கள். ஆனால் 5.19 லட்சம் வாக்குகள் அதிகம் பெற்றதில் இருந்தே சைதை துரைசாமியின் தனிப்பட்ட செல்வாக்கை உணர முடியும்.

### அதிமுக-வின் முதல் சென்னை மேயர்

திமுக-வின் கோட்டையாக இருந்த சென்னை மாநகராட்சியை 2011-ம் ஆண்டு தான் முதன்முதலாக அதிமுக கைப்பற்றியது என்பதால், சென்னையின் முதல் அ.தி.மு.க. மேயர் என்ற பெருமை சைதை துரைசாமிக்கு கிடைத்தது. அதனால்தானோ என்னவோ, மேயர் பதவி ஏற்பு விழாவுக்கு அன்றைய முதல்வர் ஜெயலலிதா வருகை தந்து கௌரவிப்பார் என்று பரபரப்பாக பேசப்பட்டது. ஆனால், ஜெயலலிதாவை நன்கு அறிந்த அ.தி.மு.க. தலைவர்களும் மாமன்ற உயர் அதிகாரிகளும், 'இதுபோன்ற சாதாரண விழாக்களில் எல்லாம் ஜெயலலிதா எட்டிக்கூட பார்க்க மாட்டார்' என்று உறுதியாகச் சொன்னார்கள். போதாக்குறைக்கு கடுமையாக மழையும் பெய்துகொண்டு இருந்தது.

சைதை துரைசாமியை மேயர் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என்று முயற்சி செய்த சொந்தக் கட்சிக்காரர்கள் இத்தனை பெரிய வெற்றியைக் கண்டு அதிர்ந்து நின்றனர். அதன்

என்ன செய்தார்

# சைதை துரைசாமி



பிறகும் அவர்கள் சூழ்ச்சி செய்வதை கைவிடவில்லை. சைதை துரைசாமியின் மேயர் பதவி ஏற்பு விழாவுக்கு முதல்வர் ஜெயலலிதா வந்துவிடக் கூடாது என்பதற்காக முதல்வர் அலுவலகத்திற்கு பொய்யான சில தகவல்களை அனுப்பிக்கொண்டே இருந்தார்கள்.

அவர்களின் எண்ணத்திற்கு வலுவூட்டுவது போன்று இரண்டு நாட்கள் பெய்த தொடர் மழையால், ரிப்பன் மாளிகை முழங்கால் அளவு நீரில் மிதந்துகொண்டு இருந்தது. பதவியேற்பு விழா நாளான அக்டோபர் 25, 2011 அன்றும் காலை முதல் இடைவிடாமல் மழை பெய்து கொண்டே இருந்தது. பதவியேற்பு விழாவை ஒரு சம்பிரதாயத்துக்கு மட்டுமே நடத்தும் எண்ணத்தில் எந்த முக்கிய ஏற்பாடுகளும் செய்யாமல் அசட்டையாக இருந்தார்கள். ஜெயலலிதா வருகை தர மாட்டார் என்ற எண்ணத்திலும் உறுதியாக இருந்தனர்.

ஆனால், அந்த மழை நேரத்தில் திடீரென ரிப்பன் மாளிகைக்கு மூத்த அமைச்சர்களான ஓ.பன்னீர்செல்வமும், செங்கோட்டையனும் பரபரப்பாக வந்து சேர்ந்தனர். தேங்கிக்கிடந்த தண்ணீரை அகற்றும் பணியில் மாநகராட்சி அதிகாரிகளுடன் சேர்ந்து அமைச்சர்களும் சுறுசுறுப்பாக ஈடுபட்டனர். அந்த காட்சியைப் பார்த்த பிறகு தான், ஜெயலலிதாவின் வருகை உறுதியானது. எல்லோரும் சேர்ந்து தண்ணீரை அகற்றி ஜெயலலிதா வருகைக்குக் காத்திருந்தார்கள்.

**ஜெயலலிதா முகத்தின் புன்னகை**

மிகச்சரியாக, பகல் 10:50க்கு எந்த ஆரவாரமும் இன்றி வந்துசேர்ந்தார் முதல்வர் ஜெயலலிதா. மாநகராட்சி மன்றக் கூட்டத்திற்கு முதல்வர் வந்து சேர்ந்தபிறகும், பதவி ஏற்பு விழாவை நடத்தி வைக்கவேண்டிய உயர் நீதிமன்ற நீதிபதி வரவில்லை. அதனால், சென்னை மாநகராட்சி கமிஷனர் கார்த்திகேயன் பதவிப் பிரமாணம் செய்துவைக்க முன்வந்தார்.

இதற்கு முன்பு மு.க.ஸ்டாலின் மேயர் பதவி ஏற்றபோது உயர் நீதிமன்ற நீதிபதி தானே பதவிப் பிரமாணம் செய்துவைத்தார், இப்போது மட்டும் ஏன் மாநகராட்சி கமிஷனர் என்று அதிகாரிகளும் பத்திரிகையாளர் களும் ஆச்சர்யப்பட்டார்கள். திட்டமிட்டே நீதிபதிக்கு அழைப்பு விடுக்காமல் விழா ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

முதல்வர் ஜெயலலிதா இவற்றை எல்லாம் கவனித்தும் கவனிக்காதவர் போன்று அமைதியாக இருந்தார். முதல்வர் உத்தரவு கொடுத்ததும், சென்னை மாநகர மேயர் பதவிக்கான சிறப்பு அடையாளமான செங்கோலை பெற்றுக்கொண்டு, பதவிப் பிரமாணம் எடுத்தார் சைதை துரைசாமி. ‘அதன்பிறகு சில கவுன்சிலர்கள் பதவி ஏற்றுக்கொண்டதும், ஜெயலலிதா கிளம்பினார். முதல்வரை வழியனுப்புவதற்காக விழா நிகழ்ச்சிகள் சிறிதுநேரம் ஒத்திவைக்கப்பட்டன.

அமைச்சர்களும், மேயர் சைதை துரைசாமியும் முதல்வரை வழியனுப்ப கிளம்பியதும் பத்திரிகையாளர்களும் பின் தொடர்ந்தனர். முதல்வர் காருக்கு நடந்து செல்லும்போது, ‘‘என்ன மிஸ்டர் சைதை மகிழ்ச்சியா?’’ என்று மேயரைப் பார்த்து கேட்டார்.

உடனே சைதை துரைசாமி, ‘‘ரொம்ப சந்தோஷம்மா… எனக்கு பொது வாழ்க்கையில் கிடைத்த மிகச் சிறப்பான அங்கீகாரம். இதற்கு நன்றி சொல்ல வார்த்தைகள் இல்லைம்மா’’ என்று சந்தோஷத்தில் திக்குமுக்காடினார்.

அதன் பிறகு கிடைத்த இடைவெளியில் ஜெயலலிதாவிடம் கொஞ்சம் சீரியஸாக சைதை துரைசாமி பேசியதை முழுமையாக கேட்டுவிட்டு புன்னகையுடன் கிளம்பினார் ஜெயலலிதா.

அப்படி என்ன பேசினீர்கள் என்று சைதை துரைசாமியை சூழ்ந்துகொண்டு கேட்ட பத்திரிகையாளர்களிடம், ‘பொதுவான சில அரசியல் விஷயங்கள் குறித்தும் என் குடும்பம் குறித்தும் பேசினோம்’ என்பதோடு முடித்துக்கொண்டார்.

நெருக்கமானவர்களிடம் மட்டும் அன்று ஜெயலலிதாவிடம் பேசியதை பகிர்ந்துகொண்டார். ஜெயலலிதாவிடம், ’’அம்மா இந்த மேயர் பதவியில் உங்களுக்குப் புகழ் சேர்க்கும் வகையிலும் மக்களுக்கு சிறந்த சேவை புரியும் வகையிலும் பணிபுரிவேன். என்னை தேர்வு செய்தது குறித்து நீங்கள் வருத்தப்படும் வகையில், எப்போதும் நடக்க மாட்டேன்.

ஆனால், இங்கே நடந்த சில குளறுபடிகளை நீங்களே பார்த்திருப்பீர்கள். என்னைப் பற்றி சிலர் உங்களிடம் நிச்சயம் அவதூறு சொல்வார்கள். அப்படிப்பட்ட சூழலில் எத்தகைய குற்றச்சாட்டு என்றாலும் என்னிடம் விசாரித்து, அதன் பிறகு நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டும். என் மீதான அவதூறுகளை விசாரிக்காமல் அதை நம்புகிறீர்கள் என்று தெரியவந்தால், நான் அடுத்த வினாடியே ராஜினாமா செய்துவிடுவேன் என்று சொன்னேன், அதற்கு அம்மா, ’அப்படியொரு நிலைமை உங்களுக்கு மட்டும் நிச்சயம் வராது. ஐந்து ஆண்டுகள் சிறப்பாக பணி புரிய வாழ்த்துக்கள்’ என்று அழுத்திச் சொன்னார்கள்…’’ என்று கூறினார்.

அதேநேரம், பெருநகர சென்னை மேயருக்கு உயர் நீதிமன்ற நீதிபதி பதவிப் பிரமாணம் செய்து வைப்பது தானே முறை… சைதை துரைசாமி பதவியேற்பு விழாவிற்கு ஏன் நீதிபதி வரவில்லை..? என்ற கேள்வி எல்லோருக்கும் எழுந்தது.

இதற்கு அ.தி.மு.க.வின் மூத்த நிர்வாகி சொன்ன பதில் என்ன தெரியுமா..?

‘‘மேயர் வேட்பாளராக சைதை துரைசாமியை நிறுத்தக்கூடாது என்று கட்சிக்குள் நிறைய உள்ளடி வேலைகள் நடந்தன. ஏனென்றால் அவரும் சம்பாதிக்க மாட்டார், அடுத்தவர்களையும் சம்பாதிக்க விட மாட்டார். அதனால் மாவட்டச் செயலாளர்கள் பரிந்துரைத்த பெயர்களில் சைதை துரைசாமியின் பெயர் இல்லவே இல்லை.

மேயர் வேட்பாளர்களை அறிவிப்பதற்கு முதல் நாள், அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலைக்கு ஜெயலலிதா மலர் தூவி அஞ்சலி செலுத்திய நிகழ்ச்சியில் சைதை துரைசாமி கலந்துகொண்டார். அதன்பிறகு ஹெலிகாப்டர் மூலம் திருவள்ளூரில் அரசு நிகழ்ச்சியை முடித்துவிட்டுத் திரும்பிய நேரத்திலும் சைதை துரைசாமியை அவர் பார்த்தார். சைதை துரைசாமி தலைவர்களின் வரிசையில் நில்லாமல் தள்ளி நிற்பதைப் பார்த்ததும் ஜெயலலிதா முகத்தில் சில மாற்றங்கள் தென்பட்டன.

உடனே தலைமைக் கழக அலுவலர் மகாலிங்கத்தைப் பார்த்து, ‘‘மேயர் வேட்பாளர் பட்டியலை வீட்டுக்கு எடுத்து வாருங்கள்’’ என்று உத்தரவு பிறப்பித்துவிட்டுச் சென்றார்.

ஏற்கெனவே 2003 இடைத் தேர்தல் தொடங்கி 2009 வரை, ‘என்னை நம்புங்கள்… இதைவிட நல்ல பதவி தருகிறேன்’ என்று சைதையிடம் ஜெயலலிதா சொல்லி யிருந்தார். கொளத்தூர் தொகுதியில் தோற்றுப்போன நேரத்திலும், ‘‘கவலைப்படாதீர்கள், நல்ல பதவி தருவேன்’’ என்று ஜெயலலிதா வாக்கு கொடுத்திருந்தார்.

அதனால்தான், மாவட்டச் செயலாளர்கள் கொடுத்த பட்டியலில் அவர் பெயர் இல்லை என்றாலும், ஜெயலலிதாவே முன்வந்து சைதையின் பெயரை அறிவித்தார். இதனை நிர்வாகிகளால் ஏற்க முடியவில்லை. அதனாலே அவர்கள் மேயர் தேர்தலில் மனப்பூர்வமாக வேலை பார்க்கவில்லை. சில இடங்களில் சைதையை தோற்கடிக்கும் உள்ளடி வேலையும் செய்தனர். ஆனால், முதல்வர் மற்றும் சைதை துரைசாமிக்கு இருந்த தனிப்பட்ட செல்வாக்கு, அதிமுக தொண்டர்களின் ஆதரவு காரணமாக சைதை மாபெரும் வெற்றி அடைந்துவிட்டார். ஆனாலும் அவர்கள் அடங்கவில்லை.

உட்கட்சி பூசலின் ஒரு பகுதியாகத்தான் பதவியேற்பு விழாவிற்கு தலைமை நீதிபதியை அழைக்கவில்லை. இன்னும் நிறைய குடைச்சல் கொடுப்பார்கள்… எப்படி சமாளிக்கப் போகிறாரோ?’’ என்று வருத்தப்பட்டார். சைதை துரைசாமி அவர்களை எப்படி சமாளித்தார்..?

**- அடுத்த இதழில்**


ஞானகுரு

தமிழ் லீடர்

நிறுவனர்

**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்

**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்

**எம்.ஜோதி**

வடிவமைப்பு

**வி.கிராபிக்ஸ்**

**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்

**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்

**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்

**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன்**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,

6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,

கொட்டிவாக்கம், சென்னை - 41.

**தொடர்புக்கு:** +91 98409 03586, 72997 53999, 80725 89355

**இணையதளம் :** gyanaguru.com

• எஸ்.பிரகாஷ்

# கனிமொழிக்கு அமைச்சர் பதவி ரெடி..!

## தி.மு.க. மத்திய அமைச்சர்கள் பட்டியல்

தமிழகத்தில் அறிவாலயம் ரொம்பவே சுவாரஸ்யமான இடம். பகுத்தறிவுக் கோட்டையாகவும் தி.மு.க.வின் அலுவலகமாகவும் கருதப்படும் இந்த இடத்தில் தான் பெரும் புள்ளிகள் அரசியல் எதிர்காலம் குறித்து ஆருடம் சொல்வார்கள்.

அந்த வகையில் இப்போது அறிவாலயத்தின் ஹாட்டஸ்ட் செய்தி என்னவென்றால், அடுத்த மத்திய அமைச்சர்கள் யார், அவர்களுக்கு என்ன பதவி என்பது தான்.

மக்களவைத் தேர்ததலில் பா.ஜ.க. தோல்வியைத் தழுவப் போகிறது என்றும் காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு அமையப் போகிறது என்பதிலும் இவர்கள் ரொம்பவே உறுதியாக இருக்கிறார்கள்.

ஆட்சி அமைப்பதற்கு காங்கிரஸ் கட்சிக்கு அத்தனை தொகுதிகள் கிடைக்குமா என்றெல்லாம் யாரும் அவர்களிடம் கேள்விகள் கேட்கக்கூடாது. அப்படியே கேட்டாலும், ‘அதெல்லாம் ஜெயிச்சுடும்ப்பா...’ என்று அசால்ட்டாகச் சொல்வார்கள்.

அந்த வகையில், காங்கிரஸ் ஆட்சியில் அமைச்சராகப் போகும் முக்கியப் புள்ளிகள் பட்டியல் தயாராகிவிட்டது. அவர்களுக்கு இலாக்காவும் ஒதுக்கிவிட்டனர். ரிசல்ட் அறிவிப்பு முடிந்தவுடன் நேரடியாக ஜனாதிபதி மாளிகைக்குப் போய் பதவி ஏற்க வேண்டியது தான் பாக்கி.

இந்த முறை டி.ஆர்.பாலுக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்போவது இல்லை என்று உறுதியாகச் சொல்கிறார்கள். கனிமொழிக்கு முதன் முறையாக அமைச்சரவை பதவி கிடைக்கிறது. உதயநிதியின் தயவில் ஒருவர் அமைச்சராகிறார்.

**ஜெகத்ரட்சகன்** – வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர்

**ஆ.ராசா** – தகவல் தொடர்பு, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்

**கனிமொழி** – மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர்

**தயாநிதி மாறன்** – சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்

**கே.இ.பிரகாஷ்** – இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர்



# நான் இந்தியப் பிரதமராகும் வாய்ப்பு இருக்கிறது...

## சீமான் சீரியஸ் கற்பனை பேட்டி

எந்தக் கட்சியுடன் கூட்டணி வைத்தால் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று தான் அத்தனை அரசியல் கட்சிகளும் திட்டம் போட்டு காய் நகர்த்திவரு கின்றன. இதையே அரசியல் சாணக்கியத்தனம் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், கட்சி தொடங்கப்பட்டதிலிருந்து எந்த கட்சியுடனும் கூட்டு வைக்க மாட்டேன் என்ற கொள்கையில் அன்று முதல் இன்று வரையிலும் பிடிவாதம் காட்டி வருகிறார் சீமான். 2024 மக்களவைத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் தனித்து களம் கண்டுள்ள சீமானை கற்பனையில் சந்தித்துப் பேசினோம். தேர்தல் முடிவுகள் குறித்து கொஞ்சமும் அச்சமில்லாத மனநிலையில் நம்முடன் ஆர்வமாக உரையாடினார் நாம் தமிழர் சீமான்.



• எஸ்.பாண்டியராஜன்

**கேள்வி : 2024 தேர்தலில் நாம் தமிழர் வேட்பாளர்களுக்கு வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது..?**

**சீமான்:** ஏழெட்டு தொகுதிகளில் தி.மு.க.வினர் அராஜகமாக அயோக்கியத்தனம் காட்டியிருக்கிறார்கள். நிறைய பணம் கொடுத்து மக்களை விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். ஆனாலும் மக்கள் உறுதியாக எங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். எனவே, இந்த முறை நாங்கள் 40 தொகுதிகளிலும் வெற்றி அடைவதற்கு நிறையவே வாய்ப்பு இருக்கிறது.

**கேள்வி : நிஜமாகவே தி.மு.க., அ.தி.மு.க.வைத் தாண்டி நாம் தமிழர் வேட்பாளர்கள் வென்றுவிடுவார்கள் என்று நம்புகிறீர்களா..?**

**சீமான் :** நியாயமாக தேர்தல் நடந்திருந்தால், வாக்குப்பதிவு இயந்திரத்தில் எந்த தில்லுமுல்லுவும் நடக்கவில்லை என்றால் நிச்சயம் நாங்கள் ஜெயிக்கவே வாய்ப்பு அதிகம். நாங்கள் அதிக தொகுதிகளில் வெற்றி அடைவது உறுதின்னு தெரிஞ்சு போச்சு. அதனால தான் இப்போ எங்களுடன் ஒரு தேசியக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்திட்டு இருக்குது.

**கேள்வி : கூட்டணியில் சேர்வதற்கு உங்களுக்கு ஆயிரம் கோடி ரூபாய் பணம் தருவதாகச் சொன்ன கட்சி தான், இப்போதும் பேச்சுவார்த்தை நடத்துகிறதா..?**

**சீமான் :** அரசியலில் நாகரிகம், அறம், பண்பாட்டை கடைப்பிடிக்க நினைக்கிறவன் நான். அதனால, எந்த கட்சின்னு வெளிப்படையா இப்போதைக்கு சொல்ல முடியாது. ஆனா, பேச்சுவார்த்தை நடந்துக்கிட்டு இருக்குது. இந்த தேர்தல்ல யாருக்கும் மெஜாரிட்டி கிடைக்காதுன்னு உளவுத்துறை தகவல் சொல்லிடுச்சு. அதனால தமிழகத்தில் 40 தொகுதிகளிலும் ஜெயிச்சுட்டா பிரதமர் பதவியில் நீங்களே அமர்ந்துக்கோங்க, மத்த விஷயங்களை நாங்க பார்த்துக்கிடுறோம்னு கூட்டணி ஆட்சிக்கு பேசிக்கிட்டு இருக்காங்க....

**கேள்வி : இந்த டீலுக்கு ஏதாச்சும் தொகை பேசுனாங்களா..?**

**சீமான் :** இந்த நாட்டையே என் கையில எடுத்துத் தர்றேன்னு சொல்றான், நீங்க ரேட் பத்தி பேசிக்கிட்டு இருக்கீங்க. என்னை யாரும் விலைக்கு வாங்க முடியாதுங்கிறதை முதல்ல புரிஞ்சுக்கோங்க. ஆனா, ஐயாயிரம் கோடி தர்றேன், 40 எம்.பி.க்களையும் கொடுத்துடுங்கன்னு கேட்டாங்க... அதெல்லாம் நடக்கவே நடக்காதுன்னு சொல்லிட்டேன்.

**கேள்வி : நீங்க பிரதமர் ஆயிட்டீங்கன்னா உங்க அமைச்சரவையில யாருக்கெல்லாம் பொறுப்பு கிடைக்கும்..?**

**சீமான் :** நான் இன்னும் அந்த அளவுக்கு எல்லாம் யோசிக்கலை. அதேநேரம், என்னோட நலனுக்காகவும் என் புள்ளைக்காகவும் தன்னோட வாழ்க்கையை ஒட்டுமொத்தமா தொலைச்சிட்டு நிற்கிறா என் பொண்டாட்டி. அவளுக்கு மந்திரி பதவி கொடுக்கலைன்னா அது வரலாற்றுப் பிழை ஆயிடும். அதனால, அவங்களுக்கு மட்டும் உறுதியளிச்சிருக்கேன். ஆனா, இதை இன்னமும் அவங்ககிட்டே நான் சொல்லலை... (சிரிக்கிறார்)

**கேள்வி : உங்க மனைவிக்கு பதவி குடுத்தா வாரிசு அரசியல்ன்னு கிண்டல் செய்வாங்களே..?**

**சீமான் :** எனக்கு அப்புறம் என் மனைவிக்குக் குடுத்தா அது வாரிசு அரசியல். இது, என்னை பாதுகாக்கிற ஒருத்தங்களுக்கு நான் செய்ய வேண்டிய நன்றிக்கடன். யாராவது ஏதாவது சொல்லிக்கிட்டுத் தான் இருப்பாங்க. அதையெல்லாம் நாம கண்டுக்கத் தேவையில்லை. நாம இலக்கை நோக்கி பயணிக்கும்போது இந்த மாதிரி விமர்சனங்களை எல்லாம் தள்ளிவைச்சிட்டு போய்கிட்டே இருக்க வேண்டியது தான்.

**கேள்வி : இலக்குன்னா தமிழ் ஈழம் வாங்கிக் குடுப்பீங்களா..?**

**சீமான் :** தமிழ் ஈழம் எங்க கனவு, லட்சியம். ஆனா, என்னை நம்பி ஓட்டுப் போட்ட கோடிக்கணக்கான தமிழனுக்கும் இந்தியனுக்கும் முதல்ல நான் என்னால முடிஞ்ச சேவையை செய்யணும். அதுக்கப்புறம் இலங்கைத் தமிழர்கள் யாருமே எதிர்பார்க்காத ஒரு விஷயத்தை செய்வேன். அது என்னன்னு இப்போ சொல்ல முடியாது. ராஜ ரகசியம் மாதிரி அது. அப்புறம் ஆட்சிக்கு வந்ததும் தேர்தல் பத்திர முறைகேடுகளை தடுக்கணும். எல்லாத்தையும் திரள்நிதியா மாத்துற திட்டம் இருக்குது. ஜெர்மனி அரசுடன் இணைஞ்சு வீட்டுக்கு ஒரு மாடு தரலாம்னு ஒரு மெகா திட்டம் இருக்கு.

**கேள்வி : வீடு இல்லாதவங்களுக்கு எப்படி மாடு குடுப்பீங்க..? மாடி வீட்டுல வாழ்றவங்க எப்படி மாடு வளர்ப்பாங்க..?**

**சீமான் :** இப்படியெல்லாம் யாரும்

**நான்**
**இந்தியப்**
**பிரதமராகும்**
**வாய்ப்பு**
**இருக்கிறது...**



குறுக்குத்தனமா கேள்வி கேட்கக்கூடாதுன்னு தான் எனக்கு ஓட்டு போடுறான். இத்தனை காலமா காங்கிரஸ் கட்சி செய்ய முடியாததை நான் செஞ்சு காட்டுவேன். மீன் கொடுக்காதே, மீன் பிடிக்கக் கற்றுக்கொடுன்னு எங்க முப்பாட்டன் சொல்லியிருக்கான். முதல்ல அவனுக்கு மாட்டைக் கொடுப்போம், அதுல வர்ற வருமானத்தை வைச்சு அவனே வீடு கட்டிக்குவான். ஒரு மாடு ஒரு நாளைக்கு நூறு லிட்டர் பால் தரும், அதுல பத்து லிட்டரை அவன் குடிச்சுட்டு 90 லிட்டரை வித்தாக்கூட ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல சம்பாதிப்பான். ஒரே வருஷத்தில் லட்சாதிபதி ஆயிடுவான்..

**கேள்வி : அதை விட்ரலாம். தமிழ் நாட்டுல உங்க மகன் படிக்கிறதுக்கு தமிழ் பள்ளி இல்லைன்னு வருத்தப்பட்டீங்க. அதனால நாடு முழுக்க தமிழ் பள்ளி திறக்கப் போறீங்களா..?**

**சீமான் :** அவனவனுக்கு என்ன வேணுமோ அதை படிச்சுட்டுப் போகட்டும். எல்லோரையும் தமிழ் படிங்கன்னு சர்வாதிகாரி மாதிரி கட்டாயப்படுத்த மாட்டேன். அதுக்காக தமிழை விட்ற மாட்டேன். லண்டன்ல ஒரு தமிழ் பள்ளி ஆரம்பிக்கலாம்னு இருக்கோம்.

**கேள்வி : லண்டன்ல தமிழ் பள்ளியா..?**

**சீமான் :** ஆமாம்... என் மகன் பிரபாகரனை லண்டன்ல படிக்க வைக்கலாம்னு ஒரு யோசனை இருக்குது. இப்ப நாம் அங்கே போய் ஒரு தமிழ் பள்ளி திறந்தா என் மகனும் படிச்ச மாதிரி இருக்கும், வெள்ளைக்காரனுக்கும் சொல்லி கொடுத்த மாதிரி இருக்கும். வெள்ளைக்காரன் நமக்கு ஆங்கிலம் கத்துக்கொடுத்தான். இப்ப நாம அவனுக்கு பதிலுக்கு தமிழ் சொல்லிக் கொடுப்போம். என்ன நான் சொல்றது..?

**கேள்வி : மாவீரன் பிரபாகரனுக்கு நீங்க என்ன செய்யப்போறீங்க..?**

**சீமான் :** அதான், லண்டன்ல தமிழ் பள்ளிக்கூடம் அமைக்கப் போறோமே...

**கேள்வி : இல்லீங்க. விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன்...**

**சீமான் :** அண்ணன்னு சொல்லுங்க. மெரினா பீச்சுல கலைஞருக்கு பேனா சிலை வைக்கப்போறாங்களே, அதுக்குப் பக்கத்தில் சுற்றுச்சூழலுக்கு எந்த மாசும் இல்லாம ஏகே 47 துப்பாக்கி சிலை வைக்கப்போறேன். அதுக்குள்ள நிஜ குண்டு இருக்கும். எதிரி நாட்டுக்காரன் வந்தான்னா டுமீல் டுமீல் தான். ஆனா, இதை கண்டிப்பா அரசு பணத்தில் செய்ய மாட்டேன். இதுக்கு என்னோட தமிழ் உறவுகள் திரள் நிதி கொடுக்கணும்... கொடுத்துத்தான் ஆகணும்.

**கேள்வி : உங்க இலங்கை பயணத்துல நடந்த ஏதாவது ஒரு சிறப்பு சம்பவத்தை எங்க வாசகருக்குச் சொல்லுங்களேன்...**

**சீமான் :** அது நிறைய இருக்கு தம்பி. திடீர்னு அண்ணன் என்கிட்ட ஒரு துப்பாக்கியைக் குடுத்தார். அப்பத்தான் நான் முதன்முதலா இந்த பிகே 37 துப்பாக்கியை பார்க்கிறேன். ஆப்கானிஸ்தான்ல தயாரிக்கிற ஏகே 47 மாதிரி இது பாகிஸ்தான்ல தயாரிக்கிற பிகே 37. மரத்துல நின்ன ஒரு அணிலை கரெக்டா குறி வைச்சு சுடுன்னு சொன்னாரு. எனக்கு ரொம்ப தயக்கமா இருந்திச்சு. நீ சுடலைன்னா நான் உன்னை சுடுவேன்னு அவர் துப்பாக்கியை எடுத்து மிரட்ட ஆரம்பிச்சுட்டாரு. வேற எண்ண செய்றது..? குறி பார்த்தேன்... ஒரே அடி... அந்த அணில் கீழே விழுந்திடுச்சு. அதை எடுத்து சூப் போட்டுக் குடுத்தாங்க... அதை குடிச்சா நரம்பெல்லாம் அப்படி சூடேறுது.


**கேள்வி : அதுவும் இருக்கட்டும். நீங்க பிரதமராயிட்டா பெட்ரோல், கேஸ் விலையை குறைப்பீங்களா..?**

**சீமான் :** நான் என்ன மோடியா... எண்ணெய் கம்பெனி, ஏலக்காய் கம்பெனின்னு சொல்லி யாரும் என்னை ஏமாத்த முடியாது. பதவிக்கு வந்ததும் முதல் கையெழுத்து பெட்ரோல் லிட்டர் 10 ரூபாய், கேஸ் சிலிண்டர் 100 ரூபாய். இந்த ரேட்டை கூட்டவே கூடாதுன்னு எண்ணெய் கம்பெனிக்கு நோட்டீஸ் குடுத்துடுவேன். இதுக்கு மேல விலையை ஏத்துனே, மகனே நீ செத்தே... யாருகிட்டே... அதேநேரம், பெட்ரோல் விலை குறையா இருக்குன்னு எல்லோரும் வண்டியும் காரும் எடுத்துட்டு சுத்தவும் முடியாது. சனி, ஞாயிறு மட்டும் வண்டியை எடு, மத்த நாள்ல எல்லோரும் பஸ், டிரெயின்ல போய்க்கோன்னு சட்டம் போட்டுருவேன். வீட்ல பகல்ல மட்டும் தான் கேஸ்ல சமையல் செய்யணும். மத்த நேரம் வேணும்னா ஹோட்டல்ல சாப்பிட்டுக்கோ. எவனாவது மீறுனா அவன் மாட்டை பறிச்சிடுவோம்...

தமிழ் லீடர் : அண்ணே... காதுக்குள்ளே கிர்ர்ன்னு சத்தம் கேட்குது, லேசா மயக்கம் வர்ற மாதிரி இருக்கு. மீதி பேட்டியை பிறகு வைச்சுக்குவோம் என்று தப்பித்து வந்தோம்.

**• சண்.சரவணகுமார்**

# மோடி ஜெயிச்சாலும் பா.ஜ.க. கூட்டணி வேண்டாம்



நடைபெறும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயம் மூன்றாவது முறையாக வெற்று பெறுவோம் என்று ஆளும் பா.ஜ.க. கட்சி உறுதியாக நம்புகிறது. அப்படி வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்தவுடன் தமிழகத்தில் ஆளும் தி.மு.க.வுக்கு கொடுக்கப்படும் நெருக்கடிகளை விட எடப்பாடி பழனிசாமியின் அ.தி.மு.க.வுக்கு கடுமையான சிக்கல்கள் தரப்படும் என்றும் தலைமைப் பதவி வேறு ஒருவர் கைக்கு மாற்றப்படும் என்றும் தமிழக பா.ஜ.க. வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

இதுகுறித்து அண்ணாமலையின் நெருங்கிய ஆதரவாளர் ஒருவரிடம் பேசினோம். ‘‘கடந்த தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு பிரதமர் மோடி, அமித் ஷா ஆகியோர் எடப்பாடி பழனிசாமி மீது முழுமையாக நம்பிக்கை இழந்துவிட்டனர். ஆனாலும், எடப்பாடி பழனிசாமி தன்னை ஒரு தனிபெரும் தலைவர் என்றும் அ.தி.மு.க.வுக்கு இன்னமும் தமிழகத்தில் 35 சதவிகித வாக்குகள் இருக்கின்றன என்றும் சொல்லி வருகிறார்.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் எடப்பாடி பழனிசாமியை பா.ஜ.க. கூட்டணிக்குள் கொண்டுவந்தால் நிச்சயம் 25 தொகுதிகள் ஜெயிக்க முடியும் என்று உளவுத்துறை ரிப்போர்ட் சொன்னது. ஆகவே, கடைசி நொடி வரையிலும் அவரது வருகைக்காக காத்திருந்தோம். ஆனாலும் அவர் பிடி கொடுக்கவே இல்லை. தனித்து நின்று மிகப்பெரும் தவறு செய்துவிட்டார்.

சசிகலா சிறைக்குப் போன பிறகு எடப்பாடி பழனிசாமியின் ஆட்சியைக் காப்பாற்றி நடத்திவந்தது மத்திய பா.ஜ.க. தான். அந்த நன்றியும் விசுவாசமும் அவருக்கு இல்லை. கொங்கு பகுதியில் மட்டுமே அவரது கவுண்டர் வாக்குகள் இருக்கின்றன. அந்த வாக்குகளை மட்டும் அவரால் ஜெயிக்கவே முடியாது என்பதை இந்த தேர்தல் முடிவு தெளிவாக அவருக்கு

எடுத்துக் காட்டிவிடும்.

இந்த தேர்தலில் கிட்டத்தட்ட 20 தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணி இரண்டாம் இடத்துக்கு வந்துவிடும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். ஆகவே, தேர்தல் முடிவுகள் வந்ததும் எடப்பாடி தானாகவே எங்கள் கூட்டணிக்கு வந்துவிடுவார். நாங்கள் சொல்வதைக் கேட்டு அ.தி.மு.க.வில் பன்னீர்செல்வம், டிடிவி தினகரன், சசிகலா ஆகியோரை சேர்த்து கட்சியை வலுப்படுத்துவார் என்று நம்புகிறோம். அப்படியில்லை என்றால் அமலாக்கத்துறை, சி.பி.ஐ. வழக்குகளை எடப்பாடி பழனிசாமி சந்திக்க வேண்டியிருக்கும். தலைமைப் பதவியும் காணாமல் போய்விடும். அ.தி.மு.க.வில் யாரை பொதுச்செயலாளராக்குவது என்பதை முடிவு செய்து வைத்திருக்கிறோம். அதன்படி காட்சிகள் மாறிவிடும். எங்களுக்கு மாஜி கொங்கு அமைச்சர்களும் உதவி செய்வார்கள்” என்றனர்.

பா.ஜ.க. கூடாரத்தில் உலவும் தகவல்கள் குறித்து எடப்பாடி பழனிசாமிக்கு நெருக்கமான தலைவர்களிடம் பேசினோம். “பா.ஜ.க.வினருக்கு பூச்சாண்டி காட்டுவதே வேலையாகி விட்டது. பா.ஜ.க. கூட்டணியில் இருந்து வெளியே வருவது என்று மிகத் தெளிவாக முடிவு எடுத்து வெளியே வந்துவிட்டோம். இனிமேல் அந்த கூட்டணிக்குள் திரும்புவதற்கு வாய்ப்பே இல்லை. பிரதமராக மோடி மீண்டும் ஜெயித்து வந்தாலும் பா.ஜ.க.வுடன் கூட்டணி வேண்டாம் என்பதில் எடப்பாடி பழனிசாமி உறுதியாக இருக்கிறார். இத்தனை ஆண்டுகள் கழித்து அமலாக்கத்துறை, சி.பி.ஐ. நடவடிக்கை எடுத்தால் அதையும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

எடப்பாடி பழனிசாமி மட்டுமின்றி கொங்கு அமைச்சர்களும் பா.ஜ.க. வேண்டாம் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். இப்போதே பெரியண்ணன் பாணியில் தமிழக பா.ஜ.க. பஞ்சாயத்து செய்துவருகிறது. இது நீடிக்கும் பட்சத்தில் அடுத்து சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி ஆட்சி, துணை முதல்வர் என்றெல்லாம் கோரிக்கை வைப்பார்கள். இவற்றை எல்லாம் ஏற்கவேண்டியகட்டாயத்தைஉருவாக்குவார்கள். ஆகவே, பா.ஜ.க.வுடன் இனி எப்போதும் கூட்டணி இல்லை என்பதில் ரொம்பவே உறுதியாக இருக்கிறோம்.

இந்த தேர்தல் முடிவுக்குப் பிறகு அண்ணாமலையை தலைவர் பதவியில் இருந்து நிச்சயம் மாற்றிவிடுவார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். புதிய தலைவராக எடப்பாடி பழனிசாமிக்கு நெருக்கமான தமிழிசை சௌந்தர்ராஜன் அல்லது வேலுமணிக்கு நெருக்கமான வானதி சீனிவாசனை



கொண்டுவரும் திட்டத்தில் இருக்கிறார்கள். யாரைக் கொண்டுவந்தாலும் பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்வதற்கு வாய்ப்பே இல்லை.

பாட்டாளி மக்கள் கட்சி ராமதாஸையும் இனி கூட்டணியில் சேர்க்கும் எண்ணம் இல்லை. அவர் ஒரு துரோகி என்பதை எடப்பாடி பழனிசாமி உணர்ந்துவிட்டார். வன்னியர் வாக்குகளை வாங்குவதற்கு தமிழக வெற்றிக் கழகம் வேல்முருகனுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. அவர் தி.மு.க. கூட்டணியில் அதிருப்தியில் தான் இருக்கிறார். அவர் வந்துவிட்டால் அ.தி.மு.க. கூட்டணி பலமாகிவிடும்.

அதே போல் கட்சியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட ஓ. பன்னீர்செல்வம், டிடிவி தினகரன், சசிகலா ஆகியோரையும் ஒருபோதும் கட்சியில் சேர்த்துக்கொள்ளவே மாட்டோம். எடப்பாடி பழனிசாமிக்கு தமிழகம் முழுக்கவே நல்ல பெயர் இருக்கிறது. ஜெயலலிதாவுக்குப் பிறகு வலிமையான தலைவர் என்பதை நிரூபிக்கும் வகையில் விரைவில் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் சிலரை மாற்ற இருக்கிறார். மீண்டும் இளம் பெண்களை கட்சிக்குள் கொண்டுவரும் திட்டமும் இருக்கிறது. அடுத்த 2026 தேர்தலில் மீண்டும் எடப்பாடி பழனிசாமி ஆட்சிக்கு வருவார்” என்று உறுதியாகச் சொன்னார்கள்.

தேர்தல் முடிவுகள் வரட்டும். தமிழக ஆட்டக் களம் சூடு பிடிக்கும்.






# ராகுல் ஜாதகத்தில் கல்யாண யோகம் மட்டும் தான் இருக்கிறதா..?

ராகுல் காந்தி என்றதும் நம் நினைவுக்கு வருவது அவரது டீ ஷர்ட், ஜீன்ஸ் பேண்ட், சிரித்த முகம் மட்டும் தான். ராகுல் காந்தியின் ஜாதகத்தைப் பார்க்கும் முன்பு அவரது குடும்பம், பாரம்பர்யம் என சுமார் 200 ஆண்டு கால வரலாற்றை புரட்டி எடுக்க வேண்டி இருக்கிறது. ஆண்ட பரம்பரை எனவும் அரச பரம்பரை என மார்தட்டிக் கொள்வதற்கு அத்தனை தகுதியும் ராகுல் காந்திக்கு இருக்கிறது.

ராகுல் காந்தியின் பாட்டி இந்திரா காந்தியின் தந்தையும் ஜவஹர்லால் நேருவின் அப்பாவுமான மோதிலால் நேரு அந்தக் காலத்திலேயே மிகப் பெரிய செல்வந்தர். பல சமஸ்தானங்களை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருந்தவர். அதனாலே ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இவருக்கு அரச மரியாதை கொடுத்து தனி அந்தஸ்துடன் நடத்தி வந்தனர். இவரது காலத்தில் தான் காங்கிரஸ் என்ற அமைப்பு உருவாக விதை போடப்பட்டது.

இவருக்கு பிறந்த ஒரே மகன் ஜவஹர்லால் நேரு. அவர் கல்லூரி படிக்கும் காலத்தில் அவரது அரண்மனையின் 5 வாசல்களிலும் 5 கார்கள் தயாராக நிற்கும். எந்த வாசல் பக்கம் நேரு வந்தாலும் அந்த வாசல் பக்கம் உள்ள காரில் ஏறிச் செல்வார் என்று சொல்லப்படுவது அக் மார்க் நிஜம். அந்த அளவுக்கு ராஜ வம்சத்தின் வாரிசு ராகுல். அவர் அரசியல் செய்து பிழைப்பு நடத்த வேண்டும் என்ற அவசியமும் இல்லை என்றாலும் தன்னுடைய அடையாளமாக அரசியலை நினைக்கிறார்.



கணித்தவர் :
R. சூரிய நாராயணமூர்த்தி MA
செல் எண் : 944392 3665 &
98650 65849



அதனாலே நேரு, இந்திரா, ராஜீவ்காந்தி வரிசையில் ராகுல் காந்தியும் அரசியல் களத்தில் நிற்கிறார். தொடக்கத்தில் ராகுல் காந்திக்கு அரசியல் மீது பெரிய ஆர்வம் இல்லை என்பதுடன் வெறுப்பு அதிகம் இருந்தது. ஆனால், தனது குடும்பத்தினரின் அடையாளமாகத் திகழும் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து சரிவை சந்தித்து வந்ததை அவரால் சகித்துக்கொள்ள இயலவில்லை. வலிமையான ஆளுமை மிக்க தலைவர்கள் இல்லாத சூழலில் சோனியா காந்தி ஒருவரால் காங்கிரஸ் கட்சிக்கு புத்துணர்வு ஊட்டவும் வெற்றியைநோக்கிகொண்டுசெல்லவும் இயலவில்லை. மேலும், சோனியாவின் உடல் நிலைநாளுக்குநாள்பலவீனம்அடைந்துவருகிறது. எனவே தனது தாயாரை அரசியல் சிக்கல்களி லிருந்து விடுவிக்கவே, அரசியலுக்குள் ராகுல் நுழைய வேண்டிவந்தது.

அரசியலுக்குள் நுழைந்த காலத்தில் ஒரு சிற்றரசன் மனப்பான்மை அவருக்கு இருந்தது. கொஞ்சம் அலட்சியமாக அரசியலைக் கையாண்டார். இந்த நேரத்தில் அவருக்குக் கிடைத்த விமர்சனங்கள், அலட்சியங்கள், கிண்டல், கேலி போன்றவை அவரை வலிமையாக்கின. அதன் பிறகே எல்லோரையும் ஒரே பார்வையில் பார்க்கத் தொடங்கினார். குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்கு நெருக்கமாகத் தொடங்கினார். எல்லோரிடமும் அன்பு செலுத்த ஆரம்பித்தார். பப்பு என்று கிண்டல் செய்த எதிர்க் கட்சிகள் இன்று ராகுல் காந்தியை ஒரு வலிமை மிக்க தலைவனாக பார்க்கத் தொடங்கிவிட்டன.

இத்தகைய சூழலில் 2024 மக்களவைத் தேர்தலை ராகுல் காந்தி எதிர்கொள்கிறார். இந்த தேர்தலில் ராகுல் வெற்றி பெற்று பிரதமர் பதவியை அடைவாரா அல்லது சோனியா காந்தி வழியில் பிறருக்கு வழி விடுவாரா... அல்லது மீண்டும் தோல்வியை சந்தித்து அவமானத்துக்கு ஆளாவாரா என்பதை அவரது ஜாதகத்தில் உள்ள கிரக நிலைகளை வைத்து கணிக்கலாம்.

### ராசி

| | | | |
|---|---|---|---|
| | சனி | பு | கு செ |
| ரா | | | சு |
| | | | கே ல |
| | சந் | வி | |

### நவாம்சம்

| | | | |
|---|---|---|---|
| சந் செ | | பு ல | |
| | | | கே |
| ரா | | | |
| | கு சனி | வி | சு |

**ராகுல் ஜாதகம்**

ராகுல் காந்தி 19.6.1970 அன்று புதுடெல்லியில் பிறந்தார். இவர் விருச்சிக ராசி கேட்டை நட்சத்திரம் என்பதால் கேட்டை கோட்டை ஆளும் என்பார்கள். சிம்ம லக்னத்தில் பிறந்து உள்ளார். தொடக்க காலத்தில் புதன் மகாதிசையில் பிறந்தாலும் அதன் பின் கேது, சுக்ரன், சூரியன், சந்திரன், செவ்வாய், ராகு திசை தற்போது நடப்பில் உள்ளது இவரது ஜாதகத்தில் இரண்டு கிரகம் நீசம் தவிர வேறு கிரகங்கள் ஆட்சி உச்சம் என்பது எதுவும் இல்லை இருந்தாலும் ராசி அதிபதி செவ்வாய் மற்றும் லக்னாதிபதி சூரியன் இணைந்து 11-ல் இருப்பது இதனை குரு 9ம் பார்வையாக சூரியன் செவ்வாய் பார்ப்பதால் இவர் அரசியல் பொது வாழ்வுக்கு வந்தார்,

லக்னத்தில் கேது மகம் நட்சத்திரத்தில் அமர ராகு சதய நட்சத்திர அமர வலுவான ராகு கேது தோஷம் உள்ள ஜாதகம் என்பதால் திருமண வாழ்வு தள்ளிப்போகிறது. போதாக்குறைக்கு 7க்குடையவன் சனி கிரகம் நீசம் என்றாலும் தலைமுறைக்கும் செல்வம் உள்ளதே என பேருக்குக் கூட ஒரு பெண்ணுடன் சேர்ந்து வாழ முடியாத நிலை. கிரகங்களுக்கு அரசனும் ஒன்று தான் ஆண்டியும் ஒன்றுதான்.


அதேநேரம், இந்த ஆண்டு ராகுல் மண வாழ்க்கை அமையும். அதாவது எந்த வித சடங்கு சம்பிரதாய படி இல்லாமல் ஒப்பந்த வாழ்க்கை மாதிரி தங்கை பிரியங்காவின் முயற்சியாலும் பெரியோர்கள் கட்டாயத்தின் பேரிலும் திருமணம் உறுதியாக நடக்கிறது. அதற்கான நேரம் வந்துவிட்டது.

அரசியல் வெற்றியைக் குறிக்கும் கிரகமான சூரியன், செவ்வாய், குரு, சனி இவருக்கு நல்ல நிலையில் இருப்பதால், இவருக்கு மக்களிடம் செல்வாக்கு நிறைய உள்ளது. இவரது ஜாதகம் பெரியளவில் யோகம் ஒன்றும் இல்லையென்றாலும் சில கிரகங்கள் நின்ற பாவ பலத்தால் மட்டுமே இவர் மக்கள் செல்வாக்கு மிக்க நிலையில் இருக்கிறார் என தெரிகிறது. இவர் அரசியல் பொது வாழ்வு என விரும்பவில்லை என்றாலும் இவர் மீது திணிக்கப்பட்டு பயணப்படுகிறார்

இவருக்கு சுக்ர திசையின் போது தான் பாட்டி இந்திரா துர் மரணம் அடைந்தார். அதே திசை முடிவதற்குள் அப்பா கோர மரணம் அடைந்தார். இவரது லக்னத்திற்கு பாதக திசை தொடர்ந்து குடும்பத்தையே உலுக்கிப் போட்டது. அதன் சூரிய திசையில் இவரே அரசியல் நுழைய பல தூண்டுதல் நடந்தன. சந்திர திசை செவ்வாய் திசையில் முழுமையான அரசியல் பொது வாழ்வு என வந்து விட்டார்

இவருக்கு ராகு திசை 6-11-2023-ல் தொடங்கி குரு புக்தி 20.7.2023 முதல் நடந்து வருகிறது. இக்கால கட்டத்தில் பாராளுமன்ற தேர்தலில் மிகக் கடுமையான போட்டியை சந்தித்து வருகிறார். இந்த தேர்தலில் இவர் சார்ந்து இருக்கும் காங்கிரஸ் கட்சி முழுமையாக மக்கள் பலத்தையே நம்பி உள்ளது.

காங்கிரஸ் கட்சியின் வெற்றி இவரது வெற்றியாகவே பார்க்கப்படுகிறது. இவரது கடின உழைப்பு வெற்றியை தரும் அதற்குரிய ராகு திசையும் குரு புக்தி பெரிய பதவியான பிரதமர் பதவியைக் கொடுக்காவிட்டாலும் மத்திய அமைச்சர் பதவி கட்டாயம் கிடைக்கும். பிரதமர் பதவியை அடுத்தவருக்குக் கொடுத்து வழிவிட்டு ஒதுங்கி நிற்பார் என்றே கிரகம் குறி காட்டுகிறது.



# ராகுல் காந்திக்கு எதற்கு இரண்டு..?

இன்றைய மோடி அரசு ஜனநாயகத்தைக் கடித்துக்குதறி சின்னாபின்னமாக்குகிறது, சாதாரண பொதுஜனங்களை மறந்து, தன்னுடைய எஜமானர் களுக்கு மட்டுமே மோடி விசுவாசமாக இருக்கிறார் என்றும் ராகுல் காந்தி குற்றம் சாட்டுகிறார். ராகுல் கூறும் கருத்துக்கள் சரியே. ஏனென்றால், பத்து ஆண்டு கால மோடி ஆட்சியில் சாதாரண பொதுஜனங்களுக்கு நன்மைகள் ரொம்பவே குறைவு. பெட்ரோல், கேஸ் விலை குறைவின் பயனை மக்கள் அனுபவிக்கவே இல்லை. அதோடு ரயில் பயணங்கள், கேஸ் மானியம் போன்றவை அபகரிக்கப்பட்டன.

இந்த 10 ஆண்டு காலத்தில் தான் ஏராளமான எம்.எல்.ஏ.க்கள் விலைக்கு வாங்கப்பட்டு, ஆட்சிகள் கலைக்கப்பட்டு, ஜனநாயகப் படுகொலைகள் நடைபெற்றன. எத்தனை பெரிய குற்றவாளி என்றாலும் பா.ஜ.க.வில் சேர்ந்தவுடன் புனிதமாகும் அதிசயம் நிகழ்ந்தது. மதச்சார்பற்ற நாட்டில் ராமர் கோயில் கட்டி யதை சாதனையாகச் சொல்லும் அவலம் நிகழ்ந்தது. இனியும் பா.ஜ.க.வினர் ஜனநாயகத்தை மதிக்கப் போவதில்லை என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. குஜராத்தின் சூரத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் நிலேஷ் கும்பானியின் வேட்புமனுவில் போலி சாட்சிக் கையெழுத்து என்று அவரை நிராகரித்தது மட்டுமின்றி மீதமுள்ள அத்தனை வேட்பாளர்களையும் கட்டாயப் படுத்தி வாபஸ் வாங்க வைத்து, தேர்தல் நடத்தாமலே பா.ஜ.க. வேட்பாளர் எம்.பி. ஆகிவிட்டார். மத்திய பிரதேசத்தில் இந்தூர் மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்ட அக்ஷய் கண்டிக்கு நெருக்கடி தரப்பட்டு வேட்புமனு வாபஸ் பெறும் நாளுக்குப் பிறகு கட்சி மாறியிருக்கிறார். அமித் ஷா போட்டியிடும் தொகுதியில் எதிர்த்து நிற்கும் வேட்பாளர்கள் மிரட்டப்பட்டுள்ளனர்.



இது போன்ற ஜனநாயகப் படுகொலை செய்யும் பா.ஜ.க.வை எதிர்த்து நிற்கும் ராகுல் காந்தியும் ஜனநாயகம் என்ற பெயரில் தவறு செய்யலாமா..?

கேரளாவின் வயநாடு தொகுதியிலும் உத்தரப்பிரதேசத்தின் ரேபரேலியிலும் வேட்பளராக நிற்கிறார். இந்த இரண்டு தொகுதிகளிலும் அவர் ஜெயிக்கும் பட்சத்தில் ஏதேனும் ஒரு தொகுதியை ராஜினாமா செய்து அங்கே மறு தேர்தல் நடத்தப்படும். பணம் விரயம் மட்டுமின்றி தேவையில்லாமல் ஒரு தேர்தல் திணிக்கப்படும். வெற்றி, தோல்வி பற்றி கவலைப்படாமல் ஒரு தொகுதியில் நிற்கும் தைரியம் ராகுல் காந்திக்கு இல்லையா..?

**வாசகர்கள் கவனத்திற்கு...**

தமிழ் லீடர் இதழில் அரசியல் விமர்சனமாகவே கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. தனிப்பட்ட எந்த ஒரு அரசியல்வாதியையும் கட்சியையும் தாக்குவது அல்லது உயர்த்திப்பிடிப்பது ஞானகுரு பதிப்பகத்தின் நோக்கமல்ல.

வழக்கறிஞர் **எம்.நிலா,** Bcom, LLM (Business Law), Diploma in Counselling




# Online கவுன்சிலிங்

## WhatsApp Call Only

**Talk Therapy**

திருமணத்துக்கு முன் / பின் குழப்பங்கள், காதல் பிரச்னைகள், குழந்தை வளர்ப்பு தடுமாற்றங்கள், முடிவு எடுப்பதில் சிரமம் போன்ற மன நல சிக்கல்களை மனம்விட்டுப் பேசுங்கள்...

மனவள ஆலோசகர் **எஸ்.கே.முருகன்**
ஜிஜி ரிலேசன்ஷிப் கவுன்சிலிங்.
முன்பதிவுக்கு : +91 80725 89355